கொழப்பலூருக்கும் குன்னத்தூருக்கும் இடையில் புதிய பம்பிங் ஸ்டேஷன் உருவாக்கியோ அல்லது குழாய்களை மாற்றியோ விரைவில் முடித்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலிங்கியம், கொழப்பலூர், சிருவாலூர், குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி ஆகிய 5 பேரூராட்சிகளுக்கான காவிரி நதியை ஆதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது அந்தத் திட்டம் இன்றைக்கு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இன்றைக்கு நிலவி வருகிற வறட்சியைக் கருதி ஏற்கனவே ஊத்துக்குளி ஒன்றியத்திலுள்ள 179 வழியோர கிராமங்களோடு கூடுதலாக 38 வழியோர கிராமங்களும் சேர்க்கப்பட்டு மொத்தம் 217 வழியோரக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு உத்தேச மதிப்பீடு இன்றைக்கு அவசர, அவசியத்தைக் கருதி போர்க்கால அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்து வருகிறது. இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்தபின் ஒரு வருடத்திற்குள்ளாக பணிகள் துவங்கி இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99. திரு. செ. பெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

99—

பெரும்பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தைப் பிரித்தல்

***9603**—திரு. செ. பெருமாள்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

ஏற்காட்டில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் இயங்கும் பெரும்பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தை இரண்டாக பிரித்து கொட்டசேடு கிராமத்தை மையமாக வைத்து கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்காடு பெரும்பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தை இரண்டாகப் பிரித்து கொட்டசேட்டை தலைமையிடமாகக் கொண்டு ஒரு பெரும் பல நோக்குக் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கான முன்மொழிவுகள் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பல நோக்கு கூட்டுறவுச் சங்கமானது எப்போது அமைக்கப்படும் என்பதை அரசு மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கான கோப்புகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மத்திய அரசாங்கம் ஒப்புதல் தர வேண்டி இருக்கிறது. சில சட்ட சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினால் இதற்கு நான் அறுதியிட்டு கூற இயலவில்லை. இருந்தாலும் நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் விரைந்து மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காட்டில் உள்ள பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலே 9 ஆயிரம் உறுப்பினர்கள் உள்ளார்கள். ஏற்காட்டைச் சுற்றி 67 கிராமங்கள் உள்ளன. எனவே, இந்தச் சங்கத்தை இரண்டாகப் பிரித்து, கொட்டச்சேட்டை மையமாக வைத்து, அருகிலுள்ள 20,25 கிராமங்களுக்கு ஒரு 'லேம்ப் சொசைட்டி' அமைத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைக் கருத்திலே கொண்டுதான் அங்குள்ள பொது மக்களெல்லாம் என்னிடத்திலே மனுக்கள் கொடுத்தார்கள். அதன்பேரிலே இந்த மனுக்கள் மீது மாண்புமிகு அமைச்சர் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு இருப்பதை தெரிவிப்பதோடு, மத்திய அரசிடம் நிதி கேட்க, இந்த மலைவாழ் மக்களுடைய நலனைக் கருதி மிக விரைவிலே அந்த நிதி கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்காட்டில் இயங்கும் ஏற்காடு பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தை இரண்டாகப் பிரித்து கொட்டச்சேடு கிராமத்தை மையமாக வைத்து ஒரு பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் துவங்குவது தொடர்பாக கூடுதல் விவரங்கள் அடங்கிய முன்மொழிவுகள் சேலம் மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளதாகவும், அதனைப் பரிசீலித்து அரசுக்கு இதுகுறித்து முன்மொழிவுகள் தனியாக அனுப்புவதாகவும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்கள் தெரிவித்துள்ளார்கள். அதன்படி தமிழக அரசைப் பொறுத்தவரையிலும் கூட்டுறவுச் சங்கங்களைப் பிரித்துக் கொடுப்பதில் அக்கறை கொண்டு செயல்படுகிறது. இதற்கான உத்தரவை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கான கோப்புகளின் மேல் விரைந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.